

# தமிழ் இலக்கியங்களில் காலந்தோறும் பாடுபொருள் மாற்றங்கள்

தொகுதி – III

பதிப்பாசிரியர்கள்

முனைவர் க. முருகேசன்

முனைவர் சு. குமரன்

முனைவர் ஆர். மோகனதாஸ்

282. **சு. சதீஷ்குமார்** *1363*
தமிழ்த் தலபுராணங்களில் நக்கீரர் வரலாறும் மாற்றமும்

283. **முனைவர் கோ. சங்கரவீரபத்திரன்** *1369*
காலந்தொறும் கைக்கிளை

284. **முனைவர் வெ.அ. நாகரத்தினம்** *1373*
பாடுபொருள்களில் கற்பு பெருமிடம்

285. **முனைவர் எஸ். குமரன்** *1378*
சமூகவியல் நோக்கில் தமிழ் அற இலக்கியங்கள்

286. **முனைவர் அ. ஹெப்சி ரோஸ் மேரி** *1385*
தமிழ் இலக்கண நூல்களில் பாடுபொருள் மாற்றம்

287. **முனைவர் த. விஜயலட்சுமி** *1389*
பெண் எழுத்துக்களில் பாடுபொருள் மாற்றம்

288. **மா. ஜாஸ்மின் பிரியா** *1394*
புதிய ஏவாள் சிறுகதையில் காணப்படும்
சமகாலநிகழ்வுகளும் பாடுபொருள் மாற்றங்களும்

289. **முனைவர் வேல். கார்த்திகேயன்** *1400*
முத்தொள்ளாயிரமும் பாடுபொருள் மாற்றமும்

290. **சு. பலராமன்** *1404*
தமிழ்ப் பண்பாட்டில் வண்ணத்திரையும்
பெண்களும் புதினப்பிரதிகளை மையமிட்டு

291. **முனைவர் க. சிவனேசன்** *1409*
ஆண்டாள் பாடல்களில் நாட்டார் வழக்காறுகள்

292. **இரா. அன்னலட்சுமி** *1415*
சிலப்பதிகாரத்தில் மதுரை மாநகரின் நகரமைப்பு

293. **சி. செந்தில்வடிவு** *1420*
மெய்ஞானம் உணர்த்தும் ஞானிகள்

294. **ஆ. சந்திரசேகர்** *1424*
பாடுபொருளைக் கைக்கொள்ளும் ‘காமத்திப்பூ’

295. **முனைவர். மொ. இரவிக்குமார்** *1427*
மழலைகளை மீட்போம்

296. **அ. லதா மகேசுவரி** *1432*
தமிழன்பன் கவிதைகள் காட்டும் சமுதாயம்

297. **முனைவர் இரா. இளவரசு** *1437*
மறுவாசிப்பில் முல்லைப்பாட்டு

298. **முனைவர் மா. லட்சுமிபிரியா** *1442*
இலக்கண நூல்களில் உவம உருபுகளின் மாற்றங்கள்

# 282. தமிழ்த் தலபுராணங்களில் நக்கீரர் வரலாறும் மாற்றமும்



சு. சதீஷ்குமார்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர் - 641 029.

## முன்னுரை

நக்கீரர் பெயரில் காணப்படுகின்ற நூல்கள் அனைத்தையும் இயற்றியவர் ஒருவரே என்பது ந.மு. வேங்கடசாமி நாட்டாரின் கருத்தாகும். நக்கீரர் என்னும் பெயரில் இரு புலவர்கள் இருந்ததாக கோவிந்தசாமி என்பாரும், நால்வர் இருந்ததாக வையாபுரிப் பிள்ளையும், எழுவர் என மா. இராசமாணிக்கனாரும் குறிப்பிட்டுள்ளனர். நக்கீரர் பற்றிய வரலாறு பெரும்பற்றப்புலியூர் நம்பி பாடிய திருவாலவாயுடையார் திருவிளையாடல் புராணம், பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் புராணம், கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகசர் இயற்றிய சீகாளத்திப் புராணத்தின் நக்கீரச் சருக்கம், நிரம்ப அழகிய தேசிகரின் திருப்பரங்கிரிப் புராணம் ஆகியவற்றில் சிற்சில மாற்றங்களுடன் கூறப்பட்டுள்ளது. இப்புராணங்களில் இடம்பெற்றுள்ள கருத்துகளின் அடிப்படையில் நற்றமிழ்ப் புலவராம் நக்கீரரின் வரலாற்றையும் மாற்றங்களையும் ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

## திருவிளையாடல் புராணத்தில் நக்கீரர் வரலாறு

வங்கிய சூடாமணி என்ற சண்பகப் பாண்டியனுக்குப் பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணமா? அல்லது மலர்களையும் நறுமணத் தைலங்களையும் பூசிக்கொள்வதால் தோன்றும் செயற்கை மணமா? என்ற ஐயம் எழுந்தது. அதனைத் தீர்க்குமாறு செய்யுள் இயற்றி வருவோர்க்கு ஆயிரம்பொன் அளிக்கப்பெறும் என அறிவித்தான். மதுரையில் வாழும் ஆதிசைவர் குலத்தில் பிறந்த தருமி என்பவன் வேந்தனது அறிவிப்பைக் கேட்டு சோமசுந்தரக் கடவுளே! நான் மணஞ்செய்து கொள்ள வேண்டும் என்ற விருப்புடையவனாய் உள்ளேன். என் மனக்கருத்து நிறைவேற பொருள் வேண்டும். பாண்டிய மன்னனின் ஐயம் தீருமாறு ஒரு செய்யுள் உரைத்து எனக்கருள வேண்டும் என்று வேண்டினான். இதனை,

*"தந்தை தாயிலேன் தனிய னாகிய*
*மைந்த னேன்புது வதுவை வேட்கையேன்*
*சிந்தை நோய்செயுஞ் செல்லல் தீர்ப்பதற்கு*